**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC.No.304/2017**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.2**

**Defence**
**Court**

**Name** **:**மூவேந்தன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 05.08.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது உத்தமபாளையம் காவல்நியைத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்னர் தேனி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்ஆய்வாளராக பணியில் இருந்தபோது 14.09.2014 அன்று காலை 10.00 மணிக்கு நான் நிலையத்தில் இருந்தபோது ரகசிய தகவலாளிநிலையம் ஆஜராகி கொடுத்த தகவலை

பெற்று உயர் அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் பற்றி விபரத்தை தெரிவித்தேன். அதை நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன். பின்னர் தேவையான உபகரணங்களுடன் எனது தலைமையில் தலைமைக்காவலர் சரவணன் மற்றும் முத்துராஜ் ஆகியோருடன் நிலையத்தில் இருந்து புறப்பட்டு தேனி-பெரியகுளம் சாலையில் உள்ள மதுராபுரி மின் அலுவலக பகுதியில் கண்காணித்து கொண்டிருநதபோது காலை 11.00 மணி அளவில் ஒரு நபர் வெள்ளை பிளாஸ்டிக் சாக்குப்பையுடன் நின்றவரை ரகசிய தகவலாளி அடையாளம் காட்டி மறைந்துகொண்டார். நாங்கள் அவரை பிடித்து எங்களை அறிமுகம் செய்துகொண்டு விசாரித்தோம். அவர் தேனி மாவட்டம் கம்பம், 3வது வார்டு, உலகதேவர் தெருவை சோர்ந்த பால்சாமி தேவர் மகன் முருகன் என்றா பொலிமுருகன் என்று கூறினார். அவரிடம் எங்களுங்கது கிடைத்த தகவலை தெரிவித்து அவரை சோதனை செய்ய வேண்டும் என கூறினோம். அவரிடம் அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அரசு பதிவு சபெற்ற அதிாகாரி முன்னிலையிலோ சோதனை செய்ய அவர் உரிமையை எடுத்து உரைத்தபோது அவர் வேறு எங்கும் செல்ல விரும்பலீலை என்றும் போலீஸ்பார்ட்டியாகிய தாங்களே அதே இடத்தில் வைத்து சோதனை செய்யலாம் என கூறினார். வெளி நபர் சாட்சிகள் எவரும் இல்லாததால் தலைமைக்காவலர்களை சாட்சியாக நியமித்து அவர் கூறிய சம்மதத்தை எழுத்து வடிவில் பதிவு செய்து அவரிடம் கையொப்பம் பெற்றோம். அவர் வைத்திருந்த வெள்ளை நிற சாக்குபையில் உலர் நிலையில் இலை, பூ காய்களுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதை எடை போட்டு பார்த்தபோது 3 கிலோ இருந்தது. அதில் இருந்து நிலையான மாதிரிக்காகவும் பகுப்பாய்வுக்காகவும் தலா 25 கிராம் வீதம் எடுத்து இரண்டு காக்கி நிற உறையில் வைத்து நூலால் சுற்றி NIB சீல் வைத்து அதை S1. S2 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள கஞ்சா 2 கிலோ 950 கிராமை அதே வெள்ளை சாக்குபையில் வைத்து சணலால் கட்டி NIB சீல் வைத்தோம்.

மேற்கண்ட பொருட்களை கைப்பற்றியதற்கு 12.00 மணி முதல் 12.30 வரை அத்தாட்சி தயாரித்து எதிரியிடம் கையொப்பம் பெற்றோம். அதன் பின்னர் எதிரி 12.30 முதல்13.30 மணி வரை அவர் எங்களிடம் ஒப்புதல் வாக்குமலம் கொடுத்தார் அதையும் அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தோம். பின்னர் கஞ்சாவைத்திருந்த குற்றத்திற்காக அவர் கைது செய்யப்படும் விபரத்தை தெரிவித்து 14.00 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்தோம். காவல் நிலைய குற்ற எண் 139/2014, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். விசாரணை நகலை சார்புஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இதுசம்பந்தமாக என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார். ரகசிய தகவல் **அ.சா.ஆ.5** ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தின் எதிரியின் கையொப்பம் **அ.சா.ஆ.6** ஆகும். என்னுடைய கையொப்பம் **அ.சா.ஆ. 7** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பிய கஞ்சாபொட்டலம் **சா.பொ.1** ஆகும். நிலையான மாதிரிக்கான கஞ்சாபொட்டலம் **சா.பொ.2**, மீதம் உள்ள கஞ்சா பிளாஸ்டிக் சாக்குபையுடன் கூடியது **சா.பொ.3** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

14.09.2014 அன்று காலை 8.00 மணிக்கு நிலையத்தில் இருந்தேன். நான் எனக்கு கிடைத்த தகவலை தனி தாளில் பதிவு செய்ததாக முதல் விசாரணையிலும் ஆய்வாளர் விசாரிக்கும் போதும் கூறவில்லை என்றால் சரிதான். தகவலை உயர் அதிகாரிகளுக்கு எந்த முறையில் தெரிவித்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்த நகல் அ.சா.ஆ,5 ஆகும். அ.சா.ஆ.5 ல் மேலதிகாரி அனுமதி வழங்கயிதாக மட்டும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தகவலை பெற்றுக்கொண்டதாக அதில் கூறப்படவில்லை என்றால்

சரிதான். அ.சா.ஆ.5 அச்சிடப்பட்ட படிவத்தில் சில விபரங்கள் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால்ச ரிதான். அ.சா.ஆ.5 ல் எதிரியின் பெயர் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் தகவல் எதையும் பெற்றுக்கொள்ளவும் இல்லை மேலதிகாரிகளுக்கு தகவல் அனுப்பவும் இல்லை என்றும் மேலதிகாரிகள் நான் சொன்ன நேரத்தீலி அ.சா.ஆ.5 மேற்குறிப்பு எழுதவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு தகவல் கிடைத்து 20 நிமிடம் வரை காவல் நிலையத்தில் இருந்தேன். அதுவரை தனி நபர் சாட்சிகளை சோதனைக்கு செல்லும் முன்பாக அழைத்து செல்ல நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால்ச ரிதான். எங்கள் காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு 3 வழிகள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மின்வாரிய அலுவலத்திற்கு அருகில் எந்த பகுதியில் எந்த இடம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தனிநபர் சாட்சியாக அழைத்தவர்கள் பெயர் விபரம் ஆகியவற்றை சார்பு ஆய்வாளர் விசாரணையில் நான் கூறவில்லை என்ாறல் சரிதான். அவ்வாறு வரமறுத்தவர்கள் மீது குற்றவியல் விசாரணை முறை சட்டம் 100(8)ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 1- சோதனை சம்மத கடிதத்தை நான் தான் எழுதினேன். சேதனை சம்மதகடிதத்திலும் குறிப்பாக இடம் பற்றி கூறவில்லை என்றால் சரிதான். அதுவும் அச்சிடப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். சாட்சிகளாக கையொப்பம் இட்டவர்களின் பெயர் விபரம் காணப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் தகவலாளி எந்த திசையை சுட்டிகாட்டினார் என்ற விபரத்தை உதவி ஆய்வாளர் விசாரித்தபோதும் கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எனதையும் தயார்

செய்யவில்லை என்றும் அதற்போது அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. கஞ்சாவை எந்த வகையான தராசில் எடைபோட்டோம் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். எதிரி சான்றுபொருளை எடுத்து ஆஜர் செய்தார் என்று குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி வழககு சொத்து யாரால் எடைபோடப்பட்டது, யாரால் மாதிாரி பொட்டலம் பிரிக்கப்பட்டது, யாரால் முத்திரையிடப்பட்டது என குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ல் எந்த இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்ற விபரமும் குறிப்பிடப்படவீல்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் மாதிரி முத்திரை எதுவும் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். மாதிரிக்கு எடுக்கப்பட்ட பொட்டலங்களின் மீது துண்டுத்தாளில் எழுதப்பட்ட விபரங்கள் சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டதாகும். முதல் தகவல் அறிக்கை 14.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 12.00 மணிக்கு தயாரித்த பொட்டலங்கள் மீது குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றிய இடம் பற்றி சான்றுப்பொருள் மீதான துண்டு தாளில் குறிப்பிடப்படவில்லை. சோதனை சம்மத கடிதம், அத்தாட்சியில் என்னுடைய பதவி முத்திரை பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் சான்றுப்பொருட்களில் பதவி முத்திரை பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைதுகுறிப்பாணையில் காலம்-6 ல் 13.35 மணிக்கு கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் தான் தகவல் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கைதுகுறிப்பாணை காலம் -2 ல் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்த

வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் படுத்தப்பட்டுள்ள சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.